7th November 1966]

Milo bags

*483 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether it is a fact that recently about 630 bags of milo kept in a wagon stationed on the "sick line" below the Arkonam Station Foot over bridge, was damaged and rendered unfit for human consumption; and

(b) if so, the reasons therefor?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) The consignment of Milo was moved by the Regional Director of Food, an Officer of the Government of India, and it was not intended for Madras State.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த சர்க்கார் கொள்முதலிலிருந்து எத்தனை சத விகித லாபத்திற்கு இந்த மாநிலத்தில் விநியோகிக்கிறார்கள் ?

THE HON. SRI V. RAMAIAH : It is a completely different question.

பிரப்பந்தட்டங்கள்—பெட்டிகள்

*484 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்கம் மேற்கொள்ளும் சிக்கன நடவடிக்கையாக பைல்களைச் சேர்த்துக் கொண்டுபோகும் இரும்பு தட்டுகள், பெட்டிகளுக்குப் பதிலாக பொரம்பு தட்டுகள், பெட்டிகளை உபயோகத்திற்குக் கொண்டுவரும் உத்தேசமுண்டா ?

(இ) இதுபோன்ற தட்டுகள், பெட்டிகள் வருடாவருடம் எத்தனை வாங்கப்படுகின்றன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) There are no orders prescribing that only iron trays and boxes should be used for carrying files in Government offices and the policy of the Government normally is to insist on the purchase of wooden articles. In view of this, the question of substituting iron trays and boxes by rattan trays and boxes does not arise.

திரு. எம். எஸ். செல்வராஜன் : மத்திய அரசு குறிப்பாக ரயில்வே இலாகா போன்ற இலாகாக்களில் 'அயர்ன் ட்ரேஸ்' க்குப் பதிலாக பிரம்பு தட்டுகளை உபயோகித்து வருகிறார்கள், அதைப் பற்றி நமது அரசாங்கத்திற்கு தகவல் தெரியுமா ? தெரியுமென்றால், அயர்ன் ட்ரேஸ்க்கு பதில் பிரம்பு தட்டுகளை உபயோகித்தால் சுலபமாகவும் உறுதியாகவும் இருக்கும் என்பதால், அவற்றை உபயோகிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமையா : மற்ற இலாகாக்களில் என்ன செய்கிறார்கள் என்பதைப்பற்றி இந்த அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டிய தேவையில்லை. நம்முடைய இலாகாக்களிலே 'ரட்டன்' தட்டுகளை உபயோகிப்பதற்கு வேண்டிய விதிமுறைகள் இருக்கின்றன.